**கவனிக்க**.-2021.07.09 ஆந் திகதிய 2236 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2237 - 2021 ජූලි මස 16 වැනි සිකුරාදා - 2021.07.16
2237 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1436 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1457 |


**கவனிக்க**.- (i) நீதிமன்றங்களை அவமதிப்புச் செய்தல் சட்டமூலம் 2021, யூலை மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) நிதி சட்டமூலம் 2021, யூலை மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, ஒகத்து மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, யூலை மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1433-B 82249-5,403 (2021/ 07)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலுாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (III) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (vIII) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xIII) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## அமைச்சரவை அலுவலகத்தில் சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்று சேவை வகுதி - தரம் III) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2021

அமைச்சரவை அலுவலகத்தில் நிறைவேற்று வகுதியின் III ஆம் தரத்தைச் சேர்ந்த சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை.**- இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் தகைமைகளை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைவாக ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரர் இந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு செய்யப்படுவார். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள (இலக்கம் 06 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கு அமைவாக தகைமைகளை மதிப்பிடுவதற்கான நேர்முகப் பரீட்சையானது நடாத்தப்படும்.

நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

2. **தேவையான தகைமைகள் :**

(i) **கல்வி/தொழில் தகைமைகள் :**

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

(ii) **அனுபவம் :**

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் சட்டத்தரணி ஒருவராக மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான தொழில்சார் அனுபவம் பெற்றிருத்தல். (தொடர்ச்சியான தொழில்சார் அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் அனுபவம் பெற்றுக் கொள்ளப்பட்ட காலம், திகதி மற்றும் உறுதிப்படுத்துபவரின் உத்தியோகபூர்வ முத்திரை என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட்டு நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.)

அல்லது

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் அரசாங்க நிறுவனமொன்றில் சட்டத்துறையில் மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத பின்வரும் பணிகளுக்கு ஏற்புடையதான அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

(அ) அரச வழக்குகள் தொடர்பிலான சட்ட நடவடிக்கைகள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருத்தல்;

(ஆ) உடன்படிக்கைகள் தொடர்பான சட்ட நடவடிக்கைகள்;

(இ) ஏற்புடைய சட்ட திட்டங்கள் சம்பந்தமான சட்ட நடவடிக்கைகள்;

(ஈ) சட்டமூலங்கள், சுற்றறிக்கைகள், ஒழுங்குவிதிகள் போன்ற சட்ட ஆவணங்களைத் தயாரிக்கும் நடவடிக்கைகள்;

(உ) பல்வேறுபட்ட நியதிச்சட்ட நிறுவனங்களினால் நடாத்தப்படுகின்ற சட்ட அல்லது நீதிமன்ற நடவடிக்கைகள் அல்லது விசாரணை நடவடிக்கைகள்;

(இந்த விடயங்கள் செயலாளர்/ திணைக்களத் தலைவர் அவர்களினால் வழங்கப்பட்ட சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

(iii) **உடற் தகைமை :**

விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உள மற்றும் உடல் தகுதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) **பிற தகைமைகள் :**

- இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்;
- விண்ணப்பதாரர் நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்;
- ஏதேனும் சமய பிரிவொன்றில் துறவியாகவுள்ள எவரும் இதற்காக விண்ணப்பிக்கும் தகைமையினைக் கொண்டிருக்க மாட்டார்கள் ;
- விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்.-**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதிய முறை தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்துக்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். தாங்கள் விதவைகள், அநாதைகள், தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படுகின்றவாறு தாங்கள் அதற்கான பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும்.

(ii) இந்த நியமனம் 03 ஆண்டுகளைக் கொண்ட தகுதிகூர் காலத்துக்கு உட்பட்டதாகும். பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 வருட காலப்பகுதிக்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

(iii) 2020.10.16 ஆந் திகதியிடப்பட்டதும் 18/2020 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிருவாக சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக உரிய அரச கரும மொழியில்/ மொழிகளில் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்களம் சார்ந்த ஏனைய கட்டளைகளுக்கும் இந்த நியமனமானது உட்பட்டதாகும்.

(v) விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாதென்பதோடு, தாங்கள் நியமனம் பெறுவதற்குத் தகைமை பெற்ற மொழி மூலமாவது தாங்கள் விண்ணபத்தில் குறிப்பிடப்படும் மொழி மூலமாகும்.

4. **வயதெல்லை.-** விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்றுக்கு 21 வயதுக்குக் குறையாதிருத்தல் வேண்டுமென்பதோடு, 45 வயதுக்கு மேற்படாதிருத்தலும் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்.-** 2016.02.25 ஆந் திகதியிடப்பட்டதும் 03/2016 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணையின்படி இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டமானது ரூபா 47,615.00 - 10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 110,895.00 (SL 1- 2016) ஆகும்.

6. தகுதிகளை மதிப்பிடுவதற்கான நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் புள்ளிகள் வழங்கும் திட்டமானது அடிப்படையாகக் கொள்ளப்படும் :

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | 25 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான பட்டப்பின் படிப்பு பட்டம் | 25 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா அல்லது இலங்கை சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கல்வி நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டபின் படிப்பு டிப்ளோமா | 20 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட - | | |
| | • முதலாம் வகுப்பு சித்தியுடன் கூடிய சட்டமாணி பட்டம் | 15 | |
| | • இரண்டாம் வகுப்பில் உயர் சித்தியுடன்கூடிய சட்டமாணி பட்டம் | 10 | |
| | • வகுப்பு சித்தியுடன்கூடிய சட்டமாணி பட்டம் | 07 | |
| | • சாதாரண சித்தியுடன்கூடிய சட்டமாணி பட்டம் | 05 | |
| | (ஈ) இலங்கை சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டில் முதலாம் வகுப்பு சித்தி | 10 | |
| | இலங்கை சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டில் இரண்டாம் வகுப்பு சித்தி | 05 | |
| | **குறிப்பு** I : இலங்கை சட்டக் கல்லூரியில் இறுதிப் பரீட்சையில் சிறப்பு சித்தியுடன் சித்தியடைந்திருந்தால் மாத்திரம் 05 புள்ளிகள் வழங்கப்படும். | | |
| | **குறிப்பு** II : அதி கூடிய தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | | |

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 02. | **மேலதிக தொழில்சார் தகமைகள் :**<br>விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் 2 (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தன்மையிலான மேலதிக அனுபவம்.<br>(அடிப்படைத் தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான 03 வருட அனுபவம் தவிர)<br>- ஆண்டொன்றிற்கு 07 புள்ளிகள் வீதம் ஆகக் கூடுதலாக : புள்ளிகள் 35<br>- 06 மாதங்களுக்கு மேற்பட்ட மற்றும் ஆண்டொன்றுக்கு குறைந்த காலப்பகுதிக்கு : புள்ளிகள் 03<br>* 15 ஆண்டுக்குக் குறையாத சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த (இந்த சேவைக் காலம், விண்ணப்பதாரியின் பொருட்டு வழங்கப்படுகின்ற சான்றிதழில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.) சட்டத்தரணி ஒருவரிடமிருந்து அல்லது நீதிமன்ற சேவையில் உள்ள அலுவலர் ஒருவரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் மூலம் மேலதிக அனுபவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.<br>* அரசாங்க அல்லது தனியார் துறை அலுவலர் ஒருவர் மேற்போந்த தகைமைகளை சட்டத்துடனான பதவியொன்றில் சேவையாற்றிய காலப்பகுதிக்கள் பூர்த்தி செய்யப்பட்டதாக, சம்பந்தப்பட்ட திணைக்கள/ நிறுவனத் தலைவரின் சேவை சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். | | 35 |
| 03 | **தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு** | | 10 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப் படிப்புக்காக தகவல் தொழில்நுட்பம் அல்லது கணினி விஞ்ஞானம் பிரதான பாடமாக கற்றிருத்தல். | 10 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கைச் சட்டக் கல்லூரியில் அல்லது வேறு அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டத்துறையில் டிப்ளோமா | 08 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா அல்லது வேறு நிறுவனமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில் நுட்பம் தொடர்பான NVQ 5 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான டிப்ளோமா. | 05 | |
| | (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கை சட்டக் கல்லூரியில் அல்லது வேறு அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி/ தொழில்சார் நிறுவனமொன்றில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டத்துறை பாடநெறிகளைக் கற்று/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்து கொண்டு பெற்றுக்கொண்ட சான்றிதழ். (சான்றிதழொன்றுக்கு 02 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியதாக இரண்டு சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.) | 04 | |
| | **குறிப்பு** : அதி கூடிய தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | | |

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 04 | **மொழித்தேர்ச்சி :** | | 15 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில மொழியானது பிரதான பாடமாக கொண்ட பட்டம். | 15 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டம் தொடர்பான பட்டப்பின் படிப்பினை ஆங்கில மொழி மூலம் கற்றிருத்தல் அல்லது இலங்கை சட்டக் கல்லூரியில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறியினை ஆங்கில மொழி மூலம் கற்றிருத்தல். | 12 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆங்கில மொழி சார்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட டிப்ளோமா அல்லது வேறு நிறுவனமொன்றில் ஆங்கில மொழி சார்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட NVQ 5 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான டிப்ளோமா. | 10 | |
| | (ஈ) கல்விப் பொது தராதர (உயர் தரம்) பரீட்சையில் (உள்நாடு அல்லது லண்டன்) ஆங்கில மொழிக்கு ஆகக் குறைந்தது அதி சித்தி பெற்றிருத்தல், அல்லது IELTS (Academic) மொத்தப் புள்ளிகள் 6.5 அல்லது அதற்கு மேற்பட்ட, TOEFL - IBT 79 அல்லது அதற்கு மேற்பட்ட, TOEFL - CBT 213 அல்லது அதற்கு மேற்பட்ட, அல்லது TOEFL - PBT 550 அல்லது அதற்கு மேற்பட்டதாகவிருத்தல். | 08 | |
| | (உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆங்கில மொழி சார்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட உயர் சான்றிதழ் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு நிறுவனமொன்றில் ஆங்கில மொழி சார்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட NVQ 4 ஆம் மட்ட சான்றிதழ். | 05 | |
| | **குறிப்பு** : அதி கூடிய தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | | |
| 05 | **நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கப்படும் ஆற்றல் :** | | 15 |
| | (i) பொது அறிவு மற்றும் புரிந்துகொள்தல் | 05 | |
| | (ii) சட்டத்துறையில் நவீன போக்கு தொடர்பான அறிவு | 05 | |
| | (iii) தெளிவாக கருத்துக்களை தெரிவிக்கும் ஆற்றல் மற்றும் ஆளுமை | 05 | |
| **மொத்தம்** | | | **100** |

**குறிப்பு**.- தகைமைகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்களின் காலப்பகுதி தொடர்பாகக் குறிப்பிடப்படவில்லையாயின், அத்தகைய சான்றிதழ்களுக்குரிய காலப்பகுதியை சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் ஊடாக எழுத்துமூலம் உறுதிப்படுத்திக்கொண்டு சமர்ப்பிப்பது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும். இவ்வாறு காலப்பகுதி குறிப்பிடப்படாத மற்றும் காலப்பகுதி உறுதிப்படுத்தப்படாத சான்றிதழ்களுக்கு புள்ளி வழங்குவது சம்பந்தமாக பரிசீலனை செய்யப்படமாட்டாது.

7. **விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம்**.- தகைமைகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது சகல விதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமாவர்.

நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகளும் உரிய முறையில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வருவன ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை.
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

*8.* **விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முறை.-**

(i) விண்ணப்பங்களை 2021, ஓகத்து மாதம் 23 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "அமைச்சரவைச் செயலாளர், அமைச்சரவை அலுவலகம், குடியரசு சதுக்கம், சேர் பாரொன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு - 01" என்னும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

..........................................................................................................................................................
..........................................................................................................................................................

10. வேறு தகைமைகள் :

..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

11. அனுபவம்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்) :

| நிறுவனம் | பதவி | சேவைக் காலம் |
|---|---|---|
| | | |

12. தற்போதைய தொழில் பற்றிய விபரம்:

(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும்: ..........................................................................................................

(ஆ) முதல் நியமனத் திகதி:..........................................................................................................

(இ) தற்போது வகிக்கும் பதவி:..........................................................................................................

(ஈ) மாதாந்த அடிப்படை சம்பளம்:..........................................................................................................

(உ) கொடுப்பனவுகள்:..........................................................................................................

(ஊ) மொத்த சம்பளம் : ..........................................................................................................

13. நீங்கள் ஏதாவது ஒரு குற்றத்திற்காக குற்றவாளியாகக் கணிக்கப்பட்டுள்ளீர்களா? (ஆம்/இல்லை)
ஆம் எனில், அது பற்றிய விபரங்களைத் தருக.

..........................................................................................................

..........................................................................................................

14. நீங்கள் இதற்கு முன்னர் அரசாங்க சேவையில் பணியாற்றியுள்ளீர்களா? (ஆம்/இல்லை)
ஆம் எனில், அது பற்றிய விபரங்களை தருக.

..........................................................................................................

..........................................................................................................

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் உறுதியளிக்கின்றேன். இதில் தரப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானவை எனத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் இப்பதவிக்கு நான் தகுதியற்றவனாவேன் என்பதையும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

---------

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி:----.

**திணைக்கள /நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

(அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் /அரசாங்க கூட்டுத்தாபனங்களில் /நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

பாராளுமன்ற செயலாளர் நாயகம் அவர்கட்கு,

இந்நிறுவனத்தில் .......................................................................................................... பதவியை வகிக்கும் திரு./ திருமதி/ செல்வி .......................................................................................... அவர்களின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இவர் இந்த பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் / நிரந்தரமாக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றேன். இவரது வேலையும் மற்றும் நடத்தையும் திருப்திகரமானது எனவும், இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை எனவும், ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை எனவும் சான்றுப்படுத்துகின்றேன். இந்தப் பதவிக்கு இவர் தெரிவு செய்யப்பட்டால், இவரை சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார் / விடுவிக்கப்படமாட்டார்.

---------

திணைக்கள /நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----. (பதவி முத்திரை)

07-453/3

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

*சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாவகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி*
*அம்பாந்தோட்டை மாவட்டம்*

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், வயது 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை வயது 65 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் /தமிழ் மொழிக்காக சிறப்பு சித்திகள் உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2021, ஓகத்து மாதம் 09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டப்ளியூ. எம். எம். பி. வீரசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2021, யூன் 18.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அம்பாந்தோட்டை | தங்காலை | ரன்னபிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் தெற்கு கிருவா பற்று பிரிவின் விவாகப் (பொது ) பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம்,அம்பாந்தோட்டை. |

7- 503

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தல் - இரத்துச் செய்தல்
காலி மாவட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2086 மற்றும் 2018.08.31 ஆந் திகதிய வர்த்தமானியில் பகுதி I : தொகுதி: (II அ) வில் என்னால் பிரசுரிக்கப்பட்ட காலி மாவட்டத்தின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் 1 கோரப்படும் அறிவித்தலில் கீழ்க் குறிப்பிடப்பட்ட பிரிவில் மாத்திரம் விண்ணப்பம் 1 கோரலினை இரத்துச் செய்கின்றேன்.

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் |
|---|---|---|
| காலி | காலி நாற்புறமும் சூழலும் | காலி நகரம் கிழக்குப் பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு வைத்திய பதிவாளர் பிரிவு |

டப்ளியூ. எம். எம். பி. வீரசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2021, யூன் 16.

7- 500

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்

### நாடளாவிய சேவைகள் மற்றும் அரச சேவையின் நிறைவேற்றுத் தரப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பொதுப் போட்டிப் பரீட்சை - 2021

*பின்வரும் நாடளாவிய சேவைகளின் தரம் III பதவிகளில் நிலவும் வெற்றிடங்களுக்குத் திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

- இலங்கை நிர்வாக சேவை
- இலங்கை கணக்காளர் சேவை
- இலங்கை திட்டமிடல் சேவை
- இலங்கை கல்வி நிர்வாக சேவை
- இலங்கை விஞ்ஞான சேவை

*அதற்கான விண்ணப்பப்படிவங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், நிகழ்நிலை (online) முறையினூடாக மாத்திரமே விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவங்களை நிகழ்நிலை மூலம் சமர்ப்பித்ததன் பின்னர் அதனை தரவிறக்கம் செய்து அச்சுப் பிரதியில் விண்ணப்பதாரியின் ஒப்பத்தை சான்றுப்படுத்தி, ஏற்புடையதாயின் நிறுவனத் தலைவரின் சான்றுரையுடன் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ. 1503, கொழும்பு" எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நாடளாவிய சேவைகள் மற்றும் அரச சேவையின் நிறைவேற்றுத் தரப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பொதுப் போட்டிப் பரீட்சை – 2021" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை 2021, யூலை மாதம் 17 ஆம் திகதி முதல் 2021, ஓகத்து மாதம் 16 ஆந் திகதி 24:00 மணி வரை அனுப்பி வைக்க முடியும்.*

**குறிப்பு** : விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியை பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் கட்டாயமானதாகும். அச்சுப் பிரதி தபாலில் காணாமற் போனதாக அல்லது தாமதமானதாகக் குறிப்பிட்டு செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்த முடியாது. இறுதித் தினம் வரை விண்ணப்பப்படிவங்களைத் தாமதப்படுத்துவதன் காரணமாக ஏற்படும் நட்டங்களை விண்ணப்பதாரிகளே ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

*இப் பரீட்சையானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு அமைவாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2021, நவெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும். (நாட்டில் ஏற்படக் கூடிய விசேடநிலைமையின் போது மாத்திரம் பரீட்சையானது நாடளாவிய ரீதியில் நடாத்தப்படும்). எவ்வாறாயினும் ஏதேனும் ஒரு பரீட்சை நிலையத்திற்கு போதுமானளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதவிடத்து குறித்த பரீட்சை நிலையத்திற்கு விருப்பத் தெரிவைக் குறிப்பிட்ட விண்ணப்பதாரிகள் வேறு பரீட்சை நிலையத்திற்காக கருத்திற் கொள்ளப்படுவர். (இது தொடர்பான மேலதிக விபரங்கள் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது). அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விதிமுறைகளுக்கு அமைவாக இப் பரீட்சையை பிற்போடவோ அல்லது இரத்துச் செய்யவோ பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.*

1. *இவ் அறிவித்தலில் "நியமிப்புச் செய்யும் அதிகாரி" என்பதன் மூலமாகக் கருதப்படுவது, "இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை திட்டமிடல் சேவை மற்றும் இலங்கை விஞ்ஞான சேவை போன்ற சேவைகளுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவும், இலங்கை கல்வி நிர்வாக சேவை தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவும்" ஆகும்.*

2. **ஆட்சேர்ப்பு முறை :-**

   2.1 **விருப்பத் தெரிவைக் குறிப்பிடல் :-**

   ஒவ்வொரு சேவைக்கும் ஆட்சேர்ப்புச் செய்வதற்குப் பூர்த்தி செய்திருக்க வேண்டிய தகைமைகளுக்கு அமைய விண்ணப்பதாரி ஒருவர் பல சேவைகளுக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரிகள் அந்தந்த சேவைகளுக்கான தனது விருப்பத் தெரிவைக் குறிப்பிடல் வேண்டும்.

   **கவனத்திற் கொள்க :-**

   *விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரி விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடும் விருப்பத் தெரிவைப் பின்னர் திருத்தம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரியினால் விருப்பத் தெரிவு குறிப்பிடப்படாத சேவை ஒன்றிற்கு நியமனம் பெறுவதற்காக செய்யப்படும் கோரிக்கைகள் எந்தவொரு காரணத்திற்காகவும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.*

2.2 **எழுத்துமூலப் பரீட்சை :-** இப் போட்டிப் பரீட்சையானது பின்வருமாறு இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும். அதன் முதற் பகுதியானது (பொதுப் பகுதி) அனைத்து சேவைகளுக்கும் ஏற்புடையதாகும். முதலாம் பகுதியில் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% அல்லது அதனிலும் கூடிய மற்றும் இரண்டு வினாப்பத்திரங்களினதும் மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகை 100 அல்லது அதனிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கைத் திட்டமிடல் சேவை மற்றும் இலங்கை கல்வி நிர்வாக சேவை போன்ற சேவைகளுக்குரிய பரீட்சையின் இரண்டாம் பகுதிக்கு அழைக்கப்படுவர்.

- பரீட்சையின் முதலாம் பகுதி மாத்திரம் இலங்கை விஞ்ஞான சேவைக்கு ஏற்புடையதாகும்.

2.2.1. முதலாம் பகுதி (பொதுப் பகுதி)

அனைத்து சேவைகளுக்கும் ஏற்புடையது என்பதால் அனைத்து விண்ணப்பதாரிகளும் தோற்றுதல் வேண்டும்.

| பாட எண் | வினாப்பத்திரம் | காலம் | உச்சப் புள்ளிகள் | சித்தியடைவதற்காகப் பெற வேண்டிய குறைந்தபட்ச புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | நுண்ணறிவுப் பரீட்சை | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40 |
| 02 | கிரகித்தல் | 02 மணித்தியாலம் | 100 | 40 |

2.2.2. இரண்டாம் பகுதி (ஒவ்வொரு சேவைக்குமான சிறப்புப் பகுதி)

| சேவை | பாட எண் | வினாப்பத்திரம் | காலம் | உச்சப் புள்ளிகள் | சித்தியடைவதற்காகப் பெற வேண்டிய குறைந்தபட்ச புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| 1. இலங்கை நிர்வாக சேவை | 11 | சமூக, பொருளாதார, அரசியல் போக்குகள் | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| | 12 | முகாமைத்துவ உளச்சார்பு | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| | 13 | ஆக்கபூர்வமான, பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்கள் | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. இலங்கை கணக்காளர் சேவை | 21 | நிதி மற்றும் முகாமைத்துவக் கணக்கீடு | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| | 22 | உயர் கணக்காய்வு மற்றும் பொருளாதார பகுப்பாய்வு | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 3. இலங்கை திட்டமிடல் சேவை | 31 | பொது விவேகம் | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 4. இலங்கைக‘ கல்வி நிர்வாக சேவை | 41 | பொது அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| | 42 | பகுப்பாய்வுக் கற்கை | 1 ½ மணித்தியாலம் | 100 | 40 |

2.3 **நேர்முகப் பரீட்சை:-** எழுத்துமூலப் பரீட்சையின் ஏற்புடைய வினாப்பத்திரங்களுக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளுள் ஒவ்வொரு எழுத்துமூல வினாப்பத்திரத்திற்கும் உரிய புள்ளிகளில் குறைந்தபட்சம் 40% அல்லது அதனிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் திறன் ஒழுங்கிற்கு அமைய ஒவ்வொரு சேவைக்கும் ஏற்புடையவாறு சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு மற்றும் ஏற்புடையதெனின் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு / வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு, குறித்த நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படும் திகதி நியமிப்பு செய்யும் அதிகாரியின் பணிப்பிற்கமைய தீர்மானிக்கப்படும்.

2.4 ஒவ்வொரு சேவைக்கும் ஏற்புடையவாறு எழுத்துமூலப் பரீட்சையின் புள்ளிகளினது அல்லது வாய்மொழிப்

பரீட்சையின் புள்ளிகளினது மற்றும் புள்ளிகள் வழங்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது / வாய்மொழிப் பரீட்சையின் போது பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் திறன் ஒழுங்கிற்கு அமைய ஒவ்வொரு சேவைக்கும் நியமனம் செய்யப்படும். இங்கு விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விருப்பத்தெரிவு அடிப்படையாகக் கொள்ளப்படும்.

3. **வெற்றிடங்களின் எண்ணிக்கை:-**

| குறியீடு | சேவை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை கணக்கிடப்பட்ட தினம் |
|---|---|---|---|
| SLAS | 1. இலங்கை நிர்வாக சேவை | 155 | 2020.12.31 |
| SLACS | 2. இலங்கை கணக்காளர் சேவை | 144 | |
| SLPS | 3. இலங்கை திட்டமிடல் சேவை | 139 | |
| SLEAS | 4. இலங்கை கல்வி நிர்வாக சேவை (பொது ஆளணித் தொகை)★ | 113 | 2020.06.30 |
| SLSS | 5. இலங்கை விஞ்ஞான சேவை ★★ | 85 | 2020.12.31 |

★ இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III பதவிகள் "பொது ஆளணித் தொகை" மற்றும் "விசேட ஆளணித் தொகை" என்றவாறு 2 பகுதிகளைக் கொண்டுள்ளன. இப் பரீட்சையின் போது பொது ஆளணித் தொகைக்குரிய பதவிகளுக்கு மாத்திரமே ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

ஒவ்வொரு சேவைக்கும் நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி நியமிப்பு செய்யும் அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். உரிய சேவைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தியாக்கும் வகையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் ஒழுங்கு மற்றும் தரப்பட்டுள்ள விருப்பத்தெரிவை கட்டாய அடிப்படையாகக் கொண்டு நியமனங்கள் மேற்கொள்ளப்படும். ஏதேனும் ஒரு சேவையின் வெற்றிடங்கள் அனைத்தையும் நிரப்புவதற்கு அல்லது நிரப்பாமல் இருப்பதற்கு அல்லது வெற்றிடங்களின் ஒரு பகுதியை நிரப்புவதற்கு அல்லது நிரப்பாது இருப்பதற்கு நியமிப்பு செய்யும் அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

★★ இலங்கை விஞ்ஞான சேவையின் வெற்றிட எண்ணிக்கை மேலும் பிரிக்கப்பட்டுள்ள முறை இவ் அறிவித்தலின் விஞ்ஞான சேவைக்கான ஆட்சேர்ப்பின் கல்வி / தொழிற் தகைமைகளின் கீழ் தரப்பட்டுள்ளது.

4. **ஆட்சேர்ப்பிற்கான பொது நிபந்தனைகள்: -**

4.1 அரச சேவையின் நியமனங்களை நிர்வகிக்கும் பொது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், ஒவ்வொரு சேவைக்கும் உரிய பின்வரும் சேவைப்பிரமாணக் குறிப்புக்களின் ஏற்பாடுகளுக்கும், ஏற்புடையவாறு திணைக்கள கட்டளைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் நிதி ஒழுங்கு விதிகளுக்கும், 1589/30 ஆம் இலக்க மற்றும் 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் (இதனகத்துப் பின்னர் நடைமுறை ஒழுங்குவிதிகள் எனப்படும்) மற்றும் மேற்குறித்த விதிமுறைகள், நிபந்தனைகள், கட்டளைகள், ஏற்பாடுகள், ஒழுங்குவிதிகள் மற்றும் விதிகளுக்கு இதுவரை மேற்கொள்ளப்பட்ட அல்லது எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் அமைவாகத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் உரிய சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

| *சேவை* | *சேவை பிரமாணக்குறிப்பு பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க அதி விசேட வர்த்தமானி பத்திரிகையின் இலக்கமும் திகதியும்* | |
|---|---|---|
| | *இலக்கம்* | *திகதி* |
| இலங்கை நிர்வாக சேவை | 1842/2 | 2013.12.23 |
| இலங்கை கணக்காளர் சேவை | 1670/33 | 2010.09.10 |
| இலங்கை திட்டமிடல் சேவை | 1670/32 | 2010.09.10 |
| இலங்கை கல்வி நிர்வாக சேவை | 1928/28 | 2015.08.21 |
| இலங்கை விஞ்ஞான சேவை | 1877/27 | 2014.08.28 |

4.2 இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. ஓய்வூதிய முறை குறித்து அரசாங்கத்தினால் எதிர்காலத்தில்

எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு விண்ணப்பதாரி கட்டுப்படல் வேண்டும். மேலும் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். காலத்துக்குக் காலம் அரசாங்கம் பிரகடனப்படுத்தும் விதத்தில் இந்த நிதியத்துக்கு உதவித் தொகைகள் செலுத்துதல் வேண்டும்.

4.3 இந் நியமனமானது மூன்று வருட கால தகுதிகூர் காலத்திற்கு உட்பட்டது. ஏற்புடைய சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 வருடங்களினுள் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

4.4 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 இற்கு அமைய பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 வருடங்களினுள் உரியவாறு அரசகரும மொழி/அரசகரும மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

4.5 நியமனம் பெற்ற ஒருவர் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குக் கட்டுப்பட்டுள்ளார்.

4.6 தனக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய தினத்தில் பொறுப்பேற்கத் தவறும் மற்றும்/அல்லது நியமிக்கப்பட்ட பதவியின் அல்லது நியமிக்கப்பட்ட பிரதேசத்தில் கடமைகளைப் பொறுப்பேற்பதனை நிராகரிக்கும் அல்லது தவிர்க்கும் விண்ணப்பதாரிகளின் நியமனங்களை இரத்துச் செய்வதற்கு நியமிப்பு செய்யும் அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

5. **சம்பளக் கட்டமைப்பு மற்றும் மாதாந்த சம்பள அளவுத் திட்டம் :-**

2016.02.25 ஆம் திகதிய 03/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் அட்டவணை I பிரகாரம் இப் பதவிகளுக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூ. 47,615.00-10x1,335-8x1,630-17x2,170- ரூ.110,895.00 (SL1-2016) ஆகும். இதற்கு மேலதிகமாக அரச அலுவலர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் ஏனைய படிகளும் உரித்தாகும்.

6. **ஆட்சேர்ப்புத் தகைமைகள்:-**

(அ) ***பொதுத் தகைமைகள்***

i. இலங்கைப் பிரசையாக இருத்தல்.
ii. சிறந்த நடத்தையுடையவராக இருத்தல்.
iii. நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கும் பதவிக்கான கடமைகளை மேற்கொள்வதற்குமான போதிய உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல்.
iv. ஆட்சேர்ப்புக்கான அனைத்துத் தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல்.

(ஆ) ***கல்வி /தொழிற் தகைமைகள் மற்றும் வயதெல்லை:-***

I. ஒவ்வொரு சேவைக்கும் ஆட்சேர்ப்புச் செய்வதற்குரிய வயதெல்லைகள் பின்வருமாறு.

| சேவை | வயது |
|---|---|
| இலங்கை நிர்வாக சேவை<br>இலங்கை கணக்காளர் சேவை<br>இலங்கை திட்டமிடல் சேவை | விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று வயது இருபத்து இரண்டு(22) வருடங்களுக்குக் குறையாதவராகவும் இருபத்தெட்டு (28) வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். |
| இலங்கை கல்வி நிர்வாக சேவை | விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று வயது இருபத்து இரண்டு(22) வருடங்களுக்குக் குறையாதவராகவும் முப்பத்து இரண்டு (32) வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். |
| இலங்கை விஞ்ஞான சேவை | விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று வயது இருபத்து இரண்டு(22) வருடங்களுக்குக் குறையாதவராகவும் இருபத்தெட்டு (28) வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். |

II. இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை திட்டமிடல் சேவை மற்றும் இலங்கை கல்வி

நிர்வாக சேவைக்குத் தேவையானகல்வி / தொழிற் தகைமைகள் பின்வருமாறு.

**குறிப்பு** : இங்கு பட்டம்/ பட்டப்பின் படிப்பு எனக் கருதப்படுவது, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டமளிக்கப்படும் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனத்தினால் வழங்கப்படும் பட்டம்/ பட்டப்பின் படிப்பு ஆகும்.

| சேவை | கல்வித் தகைமைகள் |
|---|---|
| 1. இலங்கை நிர்வாக சேவை | பட்டமொன்றைப் பெற்றிருத்தல் |
| 2. இலங்கை கணக்காளர் சேவை | (i) வர்த்தகம், முகாமைத்துவம், கணக்கீடு, பொருளியல் போன்ற துறைகளில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் ; <br> அல்லது <br> (ii) இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின்/இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் கணக்கீடு அல்லது வர்த்தகம் பற்றிய உயர் டிப்ளோமாவைப் பெற்றிருத்தல் அல்லது உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமாவைப் பெற்றிருத்தல் ; <br> அல்லது <br> (iii) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அல்லது வேறேதும் பொதுநலவாய நாடொன்றின் பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் தகுதிச் சான்றுடைய II அல்லது இடைநிலைப் பரீட்சை அல்லது கணக்கீடு மற்றும் வியாபார சான்றிதழ் II அல்லது வியாபார படிமுறை பரீட்சை அல்லது நிறுவனம்சார் படிமுறைII பரீட்சை அல்லது அதனிலும் உயர் பரீட்சை ஒன்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ; <br> அல்லது <br> (iv) ஐக்கிய இராச்சியத்தின் அல்லது வேறு யாதேனுமொரு பொதுநலவாய நாட்டின் பட்டயம் பெற்ற முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகமொன்றினால் நடாத்தப்படும் செலவினம் மற்றும் முகாமைத்துவம் பரீட்சையின் I மற்றும் II பகுதிகளில் அல்லது இடைநிலைப் பரீட்சையில் அல்லது அதனிலும் உயர் பரீட்சை ஒன்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ; <br> அல்லது <br> (v) ஐக்கிய இராச்சியத்தின் அல்லது வேறு யாதேனுமொரு பொதுநலவாய நாட்டின் சான்றிதழ் பெற்ற கணக்காளர்களின் கணக்கியல் நிறுவனத்தின் I ஆவது தொழில்சார் மட்டத்தைச் சேர்ந்த அல்லது அதனிலும் உயர் மட்டத்திலான பரீட்சை ஒன்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ; <br> அல்லது <br> (vi) ஐக்கிய இராச்சியத்தின் அல்லது வேறு யாதேனுமொரு பொதுநலவாய நாட்டின் சான்றிதழ் பெற்ற கணக்காளர்களின் பட்டயச் சங்கத்தின் I மற்றும் II பகுதிகளுக்குரிய பரீட்சையில் அல்லது அதனிலும் உயர் மட்டத்திலான பரீட்சை ஒன்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ; <br> அல்லது <br> (vii) ஐக்கிய இராச்சியத்தின் செயலாளர்கள் மற்றும் நிருவாகிகளின் பட்டய நிறுவகத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ; <br> அல்லது <br> (viii) இலங்கை சான்றிதழ் பெற்ற முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் முகாமைத்துவ மட்ட அல்லது அதனிலும் உயர் மட்டத்திலான பரீட்சை ஒன்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

| சேவை | கல்வித் தகைமைகள் |
|---|---|
| 3. இலங்கை திட்டமிடல் சேவை | (i) முதலாம்வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(ii) பட்டம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பாராளுமன்ற சட்டமொன்றினால் தாபிக்கப்பட்டுள்ள பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்குக் குறையாத பாடநெறி கால எல்லை கொண்ட பட்டப்பின் படிப்பு டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல். |
| 4. இலங்கை கல்வி நிர்வாக சேவை | பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 5. இலங்கை விஞ்ஞான சேவை | ஒவ்வொரு பதவிக்குமுரிய கல்வித் தகைமைகள் பின்வரும் தொடரிலக்கம் 6 (ஆ) IIIஇன் கீழ்க் காணப்படும் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. |

**குறிப்பு**.- மேற்குறித்த ஒவ்வொரு சேவைக்கும் ஏற்புடைய பதவிகள் அவற்றிற்கான சேவைப் பிரமாணக்குறிப்புக்களில் காட்டப்பட்டுள்ளன.

III. இலங்கை விஞ்ஞான சேவைக்கு அவசியமான கல்வித் தகைமைகள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை பின்வருமாறு.

| தொடரிலக்கம் | அமைச்சு/ திணைக்களம் | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | தேசிய நூதனசாலை திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் (மனித இனவியல்) | 01 | I. வரலாறு அல்லது தொல்பொருளியல் துறையில் வகுப்புச் சித்தியுடனான விசேட பட்டம் பெற்றிருத்தல்<br>அல்லது<br>II. மேற்குறித்த I இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பாடத்தில் விசேட பட்டம் அல்லது குறித்த பாடத்தை பிரதான பாடமாகக் கொண்ட பொதுப் பட்டத்துடன் குறித்த பாடத்திலேயே பட்டப் பின் படிப்பு |
| | | உதவிப் பணிப்பாளர் (மானிடவியல்) | 01 | I. I. மானிடவியல் அல்லது சமூக விஞ்ஞான துறையில் வகுப்புச் சித்தியுடனான விசேட பட்டம் பெற்றிருத்தல்<br>அல்லது<br>II. மேற்குறித்த I இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பாடத்தில் விசேட பட்டம் அல்லது குறித்த பாடத்தை பிரதான பாடமாகக் கொண்ட பொதுப் பட்டத்துடன் குறித்த பாடத்திலேயே பட்டப் பின் படிப்பு |
| 2 | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) | 02 | I. விவசாயம், ஏற்றுமதி விவசாயம், விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம், விவசாய விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம், உயிர் முறைமைகள் தொழில் நுட்பவியல், விவசாய வள முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம், விவசாய வியாபார முகாமைத்துவம், பசுமை தொழில்நுட்பம் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் வகுப்புச் சித்தியுடனான நான்கு வருட விஞ்ஞானமாணி விவசாய பட்டம் அல்லது |

| தொடரிலக்கம் | அமைச்சு/ திணைக்களம் | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | II. தாவரவியல், இரசாயனவியல், உயிர் வேதியியல், உயிரியல் தொழில்நுட்பம், உயிரியல், பிரயோக உயிரியல் அல்லது உயிரியல் புள்ளிவிபரவியல் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் வகுப்புடனான விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது<br>III. தாவரவியல், இரசாயனவியல், உயிர் வேதியியல்,உயிரியல் தொழில்நுட்பம், உயிரியல், பிரயோக உயிரியல் அல்லது உயிரியல் புள்ளிவிபரவியல் போன்ற பாடங்களுள் குறைந்தபட்சம் ஒரு பாடத்தை பிரதான பாடமாகக் கொண்ட வகுப்புச் சித்தியுடனான பொது விஞ்ஞானமாணி பட்டம், அல்லது<br>IV. உயிரியல் விஞ்ஞானமாணி பட்டத்துடன் மேற்குறித்த ஏதேனுமொரு பாடத்தில் பட்டப்பின் படிப்பு |
| | | உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) | 03 | I. விவசாயம், ஏற்றுமதி விவசாயம், விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம், விவசாய விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம், உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல், விவசாய வள முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம், விவசாய வியாபார முகாமைத்துவம், பசுமை தொழில்நுட்பம் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் வகுப்புச் சித்தியுடனான நான்கு வருட விஞ்ஞானமாணி விவசாய பட்டம் அல்லது<br>II. தாவரவியல், இரசாயனவியல், உயிர் வேதியியல், உயிரியல் தொழில்நுட்பம், உயிரியல்,பிரயோக உயிரியல் அல்லது உயிரியல் புள்ளிவிபரவியல் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் வகுப்புச் சித்தியுடனான விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது<br>III. தாவரவியல், இரசாயனவியல், உயிர் வேதியியல், உயிரியல் தொழில்நுட்பம், உயிரியல், பிரயோக உயிரியல் அல்லது உயிரியல் புள்ளிவிபரவியல் போன்ற பாடங்களுள் குறைந்தபட்சம் ஒரு பாடத்தை பிரதான பாடமாகக் கொண்ட வகுப்புச் சித்தியுடனான பொது விஞ்ஞானமாணி பட்டம், அல்லது<br>IV. உயிரியல் விஞ்ஞானமாணி பட்டத்துடன் மேற்குறித்த ஏதேனுமொரு பாடத்தில் பட்டப்பின் படிப்பு |

| தொடரிலக்கம் | அமைச்சு/ திணைக்களம் | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 3 | தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் | 01 | I. விலங்கியல், விலங்கியல் மற்றும் மீன்பிடி, உயிரியல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம், மீன்பிடி, சமுத்திர வியல், நன்னீரியல், சூழலியல் மற்றும் இயற்கை வள முகாமைத்துவம், உணவு விஞ்ஞானம் மற்றும் போசனை, உணவு விஞ்ஞானம், உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், உணவு மற்றும் போசனை அல்லது பிரயோக உயிரியில் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி விசேட பட்டம் |
| 4 | அரசாங்க இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களம் | அரசாங்க உதவிப் இரசாயன பகுப்பாய்வாளர் | 11 | I. வகுப்புச் சித்தியுடனான இரசாயனவியல் விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது<br>II. இரசாயனவியல் விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது இரசாயனவியலை பிரதான பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணி பொதுப்பட்டத்துடன் இரசாயனவியல் பட்டப்பின் படிப்பு |
| | | சந்தேகத் திற்கிடமான ஆவணங்கள் தொடர்பான உதவிப் பகுப்பாய்வாளர் | 01 | I. இரசாயனவியல், கணினி இரசாயனவியல், பௌதீகவியல், கணினி பௌதிகவியல், கணித பௌதீகவியல் அல்லது பிரயோக பௌதீகவியல் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது<br>II. மேற்குறித்த ஏதேனுமொரு பாடத்தில் விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது அப் பாடங்களுள் ஒன்றினை பிரதான பாடமாகக் கொண்ட பொது விஞ்ஞான மாணி பட்டத்துடன் அப் பாடங்களுள் ஒன்றில் பட்டப்பின் படிப்பு அல்லது<br>III. கல்விப் பொதுத்தராதர (உயர்தர) பரீட்சையில் விஞ்ஞான பிரிவின் கீழ் பல்கலைக்கழக அனுதியைப் பெற்று கணினி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் அல்லது தகவல் முறைமை போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு உயர் சித்தியுடனான விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது<br>IV. கல்விப் பொதுத்தராதர (உயர்தர) பரீட்சையில் விஞ்ஞான பிரிவின் கீழ் பல்கலைக்கழக அனுதியைப் பெற்று கணினி விஞ்ஞானம், தகவல் தொழி நுட்பம் அல்லது தகவல் முறைமை போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் விஞ்ஞான மாணி விசேட பட்டம் அல்லது ஆகக் குறைந்தது அப்பாடங்களில் ஒரு பாடத்தை பிரதான பாடமாகக் கொண்ட பொது பட்டத்துடன் கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்ப பட்டப்பின் படிப்பு |

| தொடரிலக்கம் | அமைச்சு/ திணைக்களம் | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 5 | வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் | 01 | I. உயிரியல், பிரயோக உயிரியல், தாவரவியல், தாவர விஞ்ஞானம், தாவர உயிரியல், தாவர உயிரியல் தொழில்நுட்பம், மூலக்கூறு உயிரியல், உயிரியல் தொழில்நுட்பம், நீரியல் வள முகாமைத்துவம் அல்லது மீன்வளம் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது<br><br>II. உயிரியல், தாவரவியல்,தாவர விஞ்ஞானம் அல்லது தாவர உயிரியல் பாடத்தை உப பாடமாகக் கொண்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விலங்கியல் விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது<br><br>III. உயிரியல், தாவரவியல், தாவர விஞ்ஞானம் அல்லது தாவர உயிரியல், வனவியல் அல்லது இயற்கை வள முகாமைத்துவ பாடத்தை உப பாடமாகக் கொண்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான இரசாயனவியல் விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது<br><br>IV. சூழலியல், சுற்றுச்சூழல் முகாமைத்துவம், வனவியல்,சுற்றுச்சூழல் பாதுகாப்பு, இயற்கை வள முகாமைத்துவம், உயிர் பல்வகைமை மற்றும் பாதுகாப்பு போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது<br><br>V. உயிரியல் விஞ்ஞானமாணி பொதுப் பட்டம் அல்லது சிறப்புப் பட்டத்துடன் மேற்குறித்த IV இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பாடத்தில் பட்டப்பின் படிப்பு அல்லது<br><br>VI. விவசாயம்,விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம், விவசாய விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம், உயிர் முறைமைகள் தொழில்நுட்பம், விவசாய வள முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம், பசுமை தொழில்நுட்பம் அல்லது உயிரியல் மற்றும் மீன்வளம் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான நான்கு வருட விஞ்ஞானமாணி விவசாய பட்டம் |

| தொடரிலக்கம் | அமைச்சு/ திணைக்களம் | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 6 | வனப் பாதுகாப்பு திணைக்களம் | உதவி வனப் பாதுகாப்பாளர் | 19 | I. விலங்கியல் அல்லது இரசாயனவியலை உப பாடமாகக் கொண்ட தாவரவியல், தாவர விஞ்ஞானம் அல்லது தாவர உயிரியல் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது<br>II. முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி வனவியல் விசேட பட்டம் அல்லது<br>III. முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி உயிரியல் பட்டம் அல்லது<br>IV. விவசாயம், விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம், விவசாய விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம், உயிர் முறைமைகள் தொழில்நுட்பம், விவசாய வள முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம், பசுமை தொழில்நுட்பம் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான நான்கு வருட விஞ்ஞான மாணி விவசாய பட்டம் அல்லது<br>V. உயிரியல் அல்லது விவசாய விஞ்ஞான விஞ்ஞானமாணி பட்டத்துடன் வனவியல், தாவரவியல், உயிரியல், விவசாயம், சூழலியல் அல்லது பெருந்தோட்ட முகாமைத்துவப் பட்டப்பின் படிப்பு |
| 7 | நீர்ப்பாசனத் திணைக்களம் | உதவி மண் பகுப்பாய்வாளர் | 02 | I. இரசாயனவியல் அல்லது விவசாய இரசாயனவியல் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது<br>II. இரசாயனவியல் அல்லது விவசாய இரசாயனவியலை பிரதான பாடமாகக் கொண்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான பொது விஞ்ஞான மாணி பட்டம் |
| | | ஆராய்ச்சி உத்தியோகத்தர் (காணி உபயோகம்) | 01 | I. கணிதம், இரசாயனவியல் அல்லது பௌதீகவியல் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி விசேட பட்டம் |

| தொடரிலக்கம் | அமைச்சு/ திணைக்களம் | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 8 | தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் | உதவி பணிப்பாளர் | 01 | I. தாவரவியல், தாவர விஞ்ஞானம், தாவர உயிரியல், தோட்டக்கலை மற்றும் தளக்கோலம், சூழலியல்,சுற்றுச்சூழல் முகாமைத்துவம், இயற்கை வள முகாமைத்துவம், உயிர் பல்வகைமை மற்றும் பாதுகாப்பு போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது<br>II. விவசாயம், விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம், விவசாய விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம், உயிர் முறைமைகள் தொழில்நுட்பம், விவசாய வள முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம், பசுமை தொழில்நுட்பம் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான நான்கு வருட விஞ்ஞானமாணி விவசாய பட்டம் அல்லது<br>III. உயிரியல் விஞ்ஞானமாணி அல்லது நான்கு வருட விஞ்ஞானமாணி விவசாய பட்டத்துடன் மேற்குறித்த ஏதேனும் ஒரு பாடத்தில் ஆராய்ச்சி சார்ந்த பட்டப்பின் படிப்பு |
| 9 | கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு,வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்ட பயிர்ச்செய்கை அபிவிருத்தி மற்றும் அது சார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு | உதவிப் பணிப்பாளர் | 03 | I. விவசாயம், விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம், விவசாய விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம், உயிர் முறைமைகள் தொழில்நுட்பம், விவசாய வள முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம், விவசாய வியாபார முகாமைத்துவம், பசுமை தொழில்நுட்பம் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான நான்கு வருட விஞ்ஞானமாணி விவசாய பட்டம் அல்லது<br>II. தாவரவியல், தாவர விஞ்ஞானம், தாவர உயிரியல்,இரசாயனவியல்,உயிர் இரசாயனவியல், உயிரியல்தொழில்நுட்பம், உயிரியல், பிரயோக உயிரியல் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது<br>III. தாவரவியல், தாவர விஞ்ஞானம், தாவர உயிரியல், இரசாயனவியல், உயிரியல் இரசாயனம், உயிரியல் அல்லது பிரயோக உயிரியலை பிரதான பாடமாகக் கொண்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான பொது விஞ்ஞானமாணி பட்டம் அல்லது |

| *தொடரிலக்கம்* | *அமைச்சு/ திணைக்களம்* | *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *கல்வித் தகைமைகள்* |
|---|---|---|---|---|
| | | | | IV. உயிரியல் விஞ்ஞானமாணி பட்டத்துடன் மேற்குறித்த ஏதேனும் ஒரு பாடத்தில் பட்டப்பின் படிப்பு |
| *10* | சுகாதார அமைச்சு | பௌதிகவியலாளர் | *17* | I. பௌதிகவியல், கணினி பௌதிகவியல், பொறியியல் பௌதிகவியல், கணித பௌதிகவியல், பிரயோக பௌதிகவியல், அணு மருத்துவம் அல்லது அணு தொழில்நுட்பம் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது<br><br>II. மேற்குறித்த ஏதேனும் ஒரு பாடத்தில் விசேட பட்டம் அல்லது குறித்த அந்த ஒரு பாடத்தை பிரதான பாடமாகக் கொண்ட பொதுப் பட்டம் மற்றும் அரச நிறுவனம் ஒன்றில் அல்லது அரசாங்க பதிவுடைய மருத்துவ நிறுவனமொன்றில் கதிரியக்க நிபுணராக 05 வருட சேவை |
| | | இரசாயனவியலாளர் | *02* | I. இரசாயனவியல், உயிர் இரசாயனவியல், உயிரியல் தொழில்நுட்பம், இரசாயன தொழில்நுட்பம் அல்லது உணவு விஞ்ஞானம் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது<br><br>II. இலங்கை இரசாயனவியல் நிறுவனத்தின் அல்லது சமமான வேறு ஒரு தேசிய இரசாயன சங்கத்தின் அங்கத்துவம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் உணவு பகுப்பாய்வு குறித்து ஆகக் குறைந்தது 03 வருட அனுபவம் அல்லது<br><br>III. உயிரியல் பட்டம் மற்றும் உணவு விஞ்ஞானம் குறித்த பட்டப் பின் படிப்புடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் உணவு பகுப்பாய்வு குறித்து ஆகக் குறைந்தது 02 வருட அனுபவம் |
| | | ஆராய்ச்சி உத்தியோகத்தர் (பூச்சியியல்) | | I. பூச்சியியலை ஒரு பாடமாகக் கொண்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி விலங்கியல் விசேட பட்டம் அல்லது<br><br>II. விஞ்ஞானமாணி விலங்கியல் விசேட பட்டம் அல்லது விலங்கியலை பிரதான பாடமாகக் கொண்ட பொது விஞ்ஞானமாணி பட்டத்துடன் பூச்சியியல் பட்டப் பின் படிப்பு |

| தொடரிலக்கம் | அமைச்சு/ திணைக்களம் | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | ஆராய்ச்சி உத்தியோகத்தர் (நுண்ணுயிரியல் - நுண்மவியல், நச்சுயிரியல்) | 09 | I. முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி நுண்ணுயிரியல் விசேட பட்டம் அல்லது<br>II. உயிரியல் பட்டத்துடன் நுண்ணுயிரியல் பட்டப் பின் படிப்பு |
| | | ஆராய்ச்சி உத்தியோகத்தர் (ஒட்டுண்ணியியல்) | 01 | I. முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி விலங்கியல் விசேட பட்டம் அல்லது<br>II. உயிரியல் பட்டத்துடன் ஒட்டுண்ணியியல் பட்டப் பின் படிப்பு |
| | | ஆராய்ச்சி உத்தியோகத்தர் (இயற்கை உற்பத்தி இரசாயனவியல்) | 02 | I. இரசாயனவியல், உயிர் இரசாயனவியல், கணினி இரசாயனவியல், உயிரியல் தொழில்நுட்பம் அல்லது தாவர உயிரியில் தொழில்நுட்பம் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது<br>II. மேற்குறித்த பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்தில் விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது அப் பாடத்தை பிரதான பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணி பொதுப் பட்டத்துடன் உயிரியல் தொழில்நுட்பம், தாவர உயிரியல் அல்லது இயற்கை உற்பத்தி இரசாயனவியல் குறித்த ஆராய்ச்சி சார்ந்த பட்டப் பின் படிப்பு |
| | | ஆராய்ச்சி உத்தியோகத்தர் (தடுப்பசி தயாரிப்பு) | 01 | I. இரசாயனவியல், நுண்ணுயிரியல், உயிர் இரசாயனவியல், அணு உயிரியல்,உயிரியல் தொழில்நுட்பம், தாவர உயிரியல் தொழில்நுட்பம் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது<br>II. இரசாயனவியலை உப பாடமாகக் கொண்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி விலங்கியல் விசேட பட்டம் அல்லது<br>III. இரசாயனவியல், நுண்ணுயிரியல், உயிர் இரசாயனவியல், அணு உயிரியல், உயிரியல் தொழில்நுட்பம், தாவர உயிரியல் தொழில்நுட்பம் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது இரசாயனவியலை உப பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணி விலங்கியல் விசேட பட்டம் அல்லது மேற்குறித்த ஏதேனுமொரு பாடத்தை பிரதான பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணி பொதுப் பட்டத்துடன் நுண்ணுயிரியல் அல்லது உயிர் இரசாயனவியல் பட்டப் பின் படிப்பு |

| தொடரிலக்கம் | அமைச்சு/ திணைக்களம் | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | பூச்சியியலாளர் | 02 | I. பூச்சியியலை ஒரு பாடமாகக் கொண்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி விலங்கியல் விசேட பட்டம் அல்லது<br>II. விஞ்ஞானமாணி விலங்கியல் விசேட பட்டம் அல்லது விலங்கியலை பிரதான பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணி பொதுப் பட்டத்துடன் பூச்சியியல் பட்டப் பின் படிப்பு |
| | | உயிர் இரசாயனவியலாளர் | 01 | I. முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி உயிர் இரசாயனவியல் விசேட பட்டம் அல்லது<br>II. இரசாயனவியல் அல்லது உயிர் இரசாயன வியல் விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது இரசாயனவியல் அல்லது உயிர் இரசாயனவியலை பிரதான பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணி பொதுப் பட்டத்துடன் உயிர் இரசாயனவியல் பட்டப் பின் படிப்பு |
| | | விஞ்ஞான உத்தியோகத்தர் | 01 | I. இரசாயனவியல்,உயிர் இரசாயனவியல், கணினி இரசாயனவியல் அல்லது இரசாயன தொழில்நுட்பம் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது<br>II. இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல் ஆகிய இரண்டு பாடங்களையும் பிரதான பாடங்களாகக் கொண்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி பொதுப் பட்டம் அல்லது<br>III. இலங்கை இரசாயனவியல் நிறுவனத்தின் அல்லது சமனான தேசிய இரசாயனவியல் சங்கத்தின் அங்கத்துவம் அல்லது<br>IV. மேலே I இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடமொன்றில் விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல் ஆகிய இரண்டு பாடங்களையும் பிரதான பாடங்களாகக் கொண்ட விஞ்ஞானமாணி பொதுப் பட்டத்துடன் ஆராய்ச்சி சார்ந்த இரசாயனவியல் பட்டப் பின் படிப்பு |

| தொடரிலக்கம் | அமைச்சு/ திணைக்களம் | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 11 | பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பாண்டங்கள், மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு | உதவிப் பணிப்பாளர் | 01 | I. இரசாயனவியல், உயிர் இரசாயனவியல், உயிரியல் தொழில்நுட்பம், கனினி இரசாயன வியல், கைத்தொழில் இரசாயனவியல், பல்படிம இரசாயனவியல், இரசாயனவியல் தொழில்நுட்பம், பௌதிகவியல், கனினி பௌதிகவியல், பொறியியல் பௌதிகவியல், கணித பௌதிகவியல் அல்லது பிரயோக பௌதிகவியல் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது<br>II. மேற்குறித்த பாடங்களில் குறைந்தபட்சம் ஒரு பாடத்தை பிரதான பாடமாகக் கொண்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி பொதுப் பட்டம் அல்லது<br>III. மேற்குறித்த ஏதேனுமொரு பாடத்தில் விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது மேற்குறித்த பாடங்களில் குறைந்தபட்சம் ஒரு பாடத்தை பிரதான பாடமாகக் கொண்டவிஞ்ஞானமாணி பொதுப் பட்டம் மற்றும் குறித்தஅப் பாடத்தில் பட்டப் பின் படிப்பு |

(இ) ***தகைமைகள் பற்றிய வரையறைகள்:***

i. இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கைத் திட்டமிடல் சேவை மற்றும் இலங்கை விஞ்ஞான சேவைக்கு எந்தவொரு மதத்தையும் சேர்ந்த துறவிக்கு விண்ணப்பிக்கவோ அல்லது தோற்றவோ அனுமதி கிடையாது. (இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு இவ் வரையறை ஏற்புடையதன்று)

7. ***பரீட்சை நிபந்தனைகள்:***

I. இப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.பரீட்சார்த்திகள் தாம் விரும்பும் மொழியொன்றில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சார்த்திகள் இப் பரீட்சைக்கு தான் விண்ணப்பிக்கும் சேவைகளுக்குரிய அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டும் என்பதுடன், அதன் பொருட்டு ஒரு மொழிமூலத்தை மாத்திரம் தெரிவு செய்தல் வேண்டும். பரீட்சார்த்திக்கு தமது விண்ணப்பத்தில் காட்டப்பட்ட பரீட்சை மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

II. நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவத்தை ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தியாக்குதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதிக்கு மேலதிகமாகஅச்சுப் பிரதியொன்றையும் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். மென்பிரதி மற்றும் அச்சுப் பிரதி (printout) ஆகிய இரண்டும் பரீட்சைத் திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்றதன் பின்னர் உறுதிப்படுத்தும் (verify) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், செல்லுபடியான விண்ணப்பப்படிவமாக திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது/ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பது பற்றி கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தியொன்றின் (SMS) மூலம் அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள பொது அறிவுறுத்தல் படிவத்தை (Common Instruction) தரவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துகையில் இவ் அறிவுறுத்தல்களைக் கட்டாயமாகப் பின்பற்றவும். பின்னர் ஏதேனும் விடயம் தொடர்பில் வினவும் போது

சமர்ப்பிப்பதன் பொருட்டு விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியொன்றைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியான திருத்தமாகக் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

III. இப் பரீட்சையின் முதலாவது பகுதியின் பரீட்சைக் கட்டணம் ரூ. 1000.00 (ஆயிரம் ரூபா) ஆகும். இரண்டாவது பகுதியின் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ரூ. 300.00 (முந்நூறு ரூபா) ஆகும். முதலாவது பகுதியில் சித்தியடைந்ததன் பின்னரே இரண்டாவது பகுதிக்கான பரீட்சைக் கட்டணத்தை செலுத்துதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் நிகழ்நிலை முறைமை ஊடாக வழங்கப்பட்டுள்ள பின்வரும் கட்டணம் செலுத்தும் முறையின் கீழ் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.

(i) எந்தவொரு வங்கியினதும் கடனட்டைகள் மூலம் ( Any Bank Credit Cards)

(ii) இணையக் கட்டண வசதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வங்கியினது பற்று அட்டைகள் மூலம் ( Any Bank Debit Cards)

(iii) இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறை மூலம் (Bank of Ceylon Online Banking Bill Payment Method)

(iv) எந்தவொரு இலங்கை வங்கிக் கிளை மூலமாகவும் (Bank of Ceylon any Branch )

(v) தபால் திணைக்களத்தின் தபால் அலுவலகத்தின் மூலம்(Postal Department Payment at Post Office)

**குறிப்பு** – மேற்குறித்த முறைகள் மூலம் கட்டணம் செலுத்தும் முறை பற்றிய அறிவுறுத்தல்கள் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

IV. கட்டணம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் குறுஞ் செய்தி (SMS) ஒன்றின் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சையின் இரண்டாவது பகுதிக்கான பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் விண்ணப்பதாரி ஒருவர் விண்ணப்பித்த அனைத்து சேவைகளுக்குமுரிய எல்லா வினாப்பத்திரங்களுக்கும் வினாப்பத்திரமொன்றிற்கு 300.00 (முந்நூறு ரூபா) வீதம் செலுத்துதல் வேண்டும். பரீட்சையின் முதலாவது பகுதியில் சித்தியடைந்ததன் பின்னர் இரண்டாம் பகுதிக்குரிய அனுமதியட்டையைப் பெற்றுக் கொள்கையில் இத் தொகையை செலுத்துதல் வேண்டும். ஏற்புடையவாறு உரிய தொகையை செலுத்துதல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணத்தை விடக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறித்த கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் ஏற்படும் தவறுகளுக்கு பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது. அத்துடன், பரீட்சையின் முதலாம் பகுதியின் இறுதியில் விண்ணப்பதாரிகள் இரண்டாம் பகுதிக்குத் தகைமை பெற்றுள்ளனர்/ பெறவில்லை என்பது குறித்து பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்படும்.பரீட்சையின் முதலாம் பகுதியில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளுக்கு அது குறித்து அறிவிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதால் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கையடக்கத் தொலைபேசி இலக்கத்தை எப்போதும் செயற்படு நிலையில் வைத்திருத்தல் விண்ணப்பதாரிகளின் பொறுப்பாகும்.

V. பரீட்சைக்காக செலுத்தப்பட்ட தொகை எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச்செலுத்தப்படவோ அல்லது வேறு ஒரு பரீட்சைக்காக மாற்றம் செய்யப்படவோ மாட்டாது.

VI. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதேனுமொரு நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி ஒருவர் தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் மூலம் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் மூலமும், அவ்வாறு அல்லாத விண்ணப்பதாரி ஒருவர் தனது கையொப்பத்தை அரசாங்க பாடசாலை அதிபர்/ ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், பிரிவின் கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளிலும் ஆணையிடும் தரத்திலுள்ள அதிகாரி, அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் அல்லது நிரந்தர பதவிநிலை தரத்தின் உத்தியோகத்தர் அல்லது பௌத்த ஆலயம் ஒன்றின் பிரதம குரு அல்லது உயர் மதகுரு அல்லது ஏனைய மத வழிபாட்டுத்தலமொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள அல்லது முக்கிய பதவி வகிக்கும் ஒருவர் மூலமாக சான்றுப்படுத்தல் வேண்டும்.

**குறிப்பு**: அனுமதியட்டையின்றி பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது. பரீட்சை ஆரம்பிக்கும் தினத்தன்று தனது கையொப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதிப்பத்திரத்தை மாத்திரமே பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதியட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்ற அல்லது பதவியொன்றிற்குத் தகைமை பெற்றுள்ளார் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படக் கூடாது.

VII. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற பூர்வாங்க கணிப்பீட்டின் படி வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குட்பட்ட விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி விண்ணப்பப்படிவங்களை சரியாக நிகழ்நிலை முறை மூலம் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதியட்டைகள் விநியோகிக்கப்படும். அவ்வாறே அனுமதியட்டையின் பிரதியொன்றை தரவிறக்கம் செய்து கொள்வதற்கான வசதிகள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும். பரீட்சைக்காக விண்ணப்பதாரிகளுக்கு அனுமதியட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு அறிவித்தலொன்று பத்திரிகைகளிலும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்ததன் பின்னரும் தனது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரி ஒருவர் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அது பற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையிடம் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவுகையில் விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், முகவரி என்பவற்றை சரியாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்பின் வெளிப்பிரதேசத்தில் வசிப்பவராயின், மேற்குறித்த விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை துரிதமாகப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கமும் குறிப்பிடப்பட்ட கோரிக்கைக் கடிதமொன்றை 0112784232 எனும் தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்புவதன் மூலம் வினவுவது அதிக பலனை தரக்கூடியதாக அமையும். அவ்வாறு வினவுகையில் பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்கு தம் வசம் வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதி,கட்டண விபரம் மற்றும் தபாலில் அனுப்பும் போது பெற்றுக் கொண்ட பதிவுத்தபால் பற்றுச்சீட்டு என்பவற்றைத் தயார் நிலையில் வைத்திருத்தல் பயனுள்ளதாக இருக்கும்.

**குறிப்பு**: இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவை மற்றும் இலங்கை கல்வி நிர்வாக சேவை போன்ற சேவைகளுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுள் எழுத்துப் பரீட்சையின் முதலாம் பகுதியின் (பொதுப் பகுதி) ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% அல்லது அதனிலும் கூடிய மற்றும் இரண்டு வினாப்பத்திரங்களினதும் மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகை 100 அல்லது அதனிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் இரண்டாம் பகுதிக்கு (குறித்த சேவைக்குரிய சிறப்புப் பகுதி) மீளவும் அனுமதி அட்டை விநியோகிக்கப்படும்.

VIII. பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேற்றினை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். இந்த சட்டதிட்டங்களை மீறுகின்ற சந்தர்ப்பத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாக நேரிடும்.

IX. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

i. தேசிய ஆளடையாள அட்டை
ii. செல்லுபடியான கடவுச்சீட்டு
iii. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அதே போன்று பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காமல் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் உத்தியோகத்தர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தது முதல் பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரிகளை இனங்காணக் கூடிய வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

8. **தவறான தகவல்களை சமர்ப்பிப்பதற்கான தண்டனை**:

எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரியினால் தரப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானது என்பதைத் தெரிந்திருந்தும் அதனை சமர்ப்பித்திருப்பது தெரியவருமாயின் அல்லது ஏதேனும் முக்கியமானதொரு விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பது நியமனத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் தெரியவருமாயின் அவரது நியமனம் இரத்துச்

செய்யப்படுவதுடன், குறித்த நியமனத்தின் கீழ் சம்பளம் அல்லது கொடுப்பனவாக அரசாங்கம்/மாகாண சபையினால் செலுத்தப்பட்டுள்ள அனைத்துத் தொகைகளும் மீள அறிவிடப்படும்.

9. **பரீட்சை மொழிமூலம் :**

(அ) பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் ஆட்சேர்ப்பு மொழிமூலமாகக் கொள்ளப்படும்

(இ) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.

(ஈ) தமது விண்ணப்பத்தில் காட்டப்பட்ட பரீட்சை மொழிமூலத்தை மாற்றுவதற்கு விண்ணப்பதாரிக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

10. **பரீட்சை முறை, நேர்முகப் பரீட்சை மற்றும் நியமனம்:**

10.1. ***எழுத்துமூலப் பரீட்சை***

10.1.1. *முதலாம் பகுதி (பொதுப் பகுதி)*

இப்பகுதிக்கு அனைத்து விண்ணப்பதாரிகளும் தோற்றுதல் வேண்டும்.

| *வினாப்பத்திரம்* | *பாடத்திட்டம்* | *வினாப்பத்திரத்தின் தன்மை* |
|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | பரீட்சார்த்தியிடம் காணப்படும் தர்க்கிக்கும் ஆற்றல், மாற்றீடு, பொருள்கோடல், தொடர்புகளைக் காணல், பெயர்ப்பு, சிக்கல்களைத் தீர்க்கும் ஆற்றல், காரண காரியத் தொடர்புகளைப் புரிந்து கொள்ளல், எதிர்வுகூறல், தகவல் ஒழுங்கமைப்பு, வடிவங்களை இனங்காணல் மற்றும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் போன்ற திறன்களை மதிப்பிடுவதற்காகத் தயாரிக்கப்படும் பல்தேர்வு வகை வினாக்களைக் கொண்டமைந்தது. | பல்தேர்வு வினாக்கள் மற்றும் / அல்லது 50 சிறு வினாக்களைக் கொண்டமைந்தது.புள்ளிகள் 100 காலம் 1 ½ மணித்தியாலம் |
| 2. கிரகித்தல் | பரீட்சார்த்தியிடம் காணப்படும் விடயங்களைப் புரிந்து கொள்ளும் திறன், தொடர்பாடல் ஆற்றல், சாராம்சப்படுத்தல், விவரித்தல் மற்றும் படைப்பாற்றல் போன்ற ஆற்றல்களை மதிப்பிடுவதற்காகத் தயாரிக்கப்படும் புறவய வினாக்களைக் கொண்டமைந்தது. | பல்தேர்வு வினாக்கள் மற்றும் / அல்லது 50 சிறு வினாக்களைக் கொண்டமைந்தது.புள்ளிகள் 100 காலம் 02 மணித்தியாலம் |

10.1.2. *இரண்டாம் பகுதி (உரிய சேவைக்குரிய சிறப்புப் பகுதி)*

இலங்கை நிர்வாக சேவைக்கு, இலங்கை கணக்காளர் சேவைக்கு, இலங்கை கல்வி நிர்வாக சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையது. இச் சேவைகளுக்கு விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பித்த சேவைக்கு /சேவைகளுக்கு உரிய அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் 40% புள்ளிகள் அல்லது அதனிலும் கூடிய புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

1. *இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சிறப்புப் பகுதி*

(I) வினாப்பத்திரக் கட்டமைப்பு :

| *வினாப்பத்திரம்* | *காலம்* | *வினாப்பத்திரத்தின் தன்மை* |
|---|---|---|
| 1. சமூக, பொருளாதார, அரசியல் போக்குகள் | 03 மணித்தியாலம் | மொத்தப் புள்ளிகள்100, சித்தியடையப் பெற வேண்டிய புள்ளிகள் 40% கட்டமைக்கப்பட்ட கட்டுரைகள்,பல்தேர்வு வினாக்கள் மற்றும் / அல்லது சிறு வினாக்களைக் கொண்டமைந்தது. |

| வினாப்பத்திரம் | காலம் | வினாப்பத்திரத்தின் தன்மை |
|---|---|---|
| 2. முகாமைத்துவ உளச்சார்பு | 03 மணித்தியாலம் | மொத்தப் புள்ளிகள் 100, சித்தியடையப் பெற வேண்டிய புள்ளிகள் 40%. கட்டமைக்கப்பட்ட கட்டுரைகள்,பல்தேர்வு வினாக்கள் மற்றும் / அல்லது சிறு வினாக்களைக் கொண்டமைந்தது. |
| 3. ஆக்கபூர்வமான, பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்கள் | 03 மணித்தியாலம் | மொத்தப் புள்ளிகள் 100, சித்தியடையப் பெற வேண்டிய புள்ளிகள் 40% கட்டுரைகள்/பகுதியளவுகட்டமைக்கப்பட்ட கட்டுரைகளைக் கொண்டமைந்தது. |

(II) பாடத்திட்டம்

| 11. சமூக, பொருளாதார மற்றும் அரசியல் போக்குகள் |
|---|
| உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைமைகள் பற்றிய விடய அறிவு அல்லது பரீட்சார்த்திக்கு முன்வைக்கப்படுகின்ற நிலைமைகளுடன் தொடர்புடையதாக ஆக்கபூர்வமாக, பகுப்பாய்வு ரீதியாக மற்றும் விமர்சன ரீதியான சிந்திக்கும் ஆற்றல், முந்துரிமை பற்றி சிந்திக்கும் ஆற்றல் மற்றும் உபாயமார்க்க ரீதியாக எதிர்காலத்தை எதிர்வுகூறக் கூடிய ஆற்றல் சம்பந்தமாக பரீட்சார்த்தி கொண்டுள்ள திறமைகளை அளவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. |
| 12. முகாமைத்துவ உளச்சார்பு |
| சிக்கல்கள் மற்றும் அவற்றுக்கான காரணங்களை இனங்காணல், தீர்மானம் மேற்கொள்ளல், நபர்களுக்கிடையிலான தொடர்புகளைப் பேணல், தொடர்பாடல் திறமை, சுய ஒழுக்கக் கொள்கை மற்றும் உபாய முறைகளைத் தயாரித்தல், மனவெழுச்சிசார் நுண்மதி எனும் வகையில் பரீட்சார்த்திக்கு முன்வைக்கப்படும் சம்பவங்கள் மற்றும் சந்தர்ப்பங்களை ஆதாரமாகக் கொண்டு பரீட்சார்த்தியிடமுள்ள திறமைகளை அளவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. |
| 13. ஆக்கபூர்வமான, பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்கள் |
| தரப்பட்ட தலையங்கங்கள் / தொனிப்பொருட்கள் பலவற்றிலிருந்து பரீட்சார்த்தி தானாகவே தெரிவு செய்யும் தலையங்கங்கள் / தொனிப்பொருட்கள் ஊடாக கருத்துக்களையும் தகவல்களையும் பகுப்பாய்தல், தொகுத்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பரீட்சார்த்தி வெளிப்படுத்தும் தர்க்க ரீதியான மற்றும் சிந்தனை சக்தியை அளவிடுவதைப் போன்றே சிக்கலான பந்தியொன்றை, ஆவணமொன்றை அல்லது நிருபமொன்றை ஊகித்துணர்ந்து கொள்ளவும் அதன் பிரதான கருத்துக்களை தனது சொற்களில் சுருக்கி சரியாகவும் தெளிவாகவும் தெரிவிப்பதில் பரீட்சார்த்தியிடமுள்ள திறமைகளை அளவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. |

2. இலங்கை கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சிறப்புப் பகுதி

(I) வினாப்பத்திரக் கட்டமைப்பு :-

| வினாப்பத்திரம் | காலம் | வினாப்பத்திரத்தின் தன்மை |
|---|---|---|
| 21. நிதி மற்றும் முகாமைத் துவக் கணக்கீடு | 03 மணித்தியாலம் | மொத்தப் புள்ளிகள் 100, சித்தியடையப் பெற வேண்டிய புள்ளிகள் 40%.(வினாப்பத்திரம் 02 பகுதிகளைக் கொண்டமைந்தது) (பகுதி I இற்கான புள்ளிகள் 60, பகுதி II இற்கான புள்ளிகள் 40) |
| 22. உயர் கணக்காய்வு மற்றும் பொருளா தாரப் பகுப்பாய்வு | 03 மணித்தியாலம் | மொத்தப் புள்ளிகள் 100, சித்தியடையப் பெற வேண்டிய புள்ளிகள் 40%.( வினாப்பத்திரம் 02 பகுதிகளைக் கொண்டமைந்தது) (பகுதி I இற்கான புள்ளிகள் 60, பகுதி II இற்கான புள்ளிகள் 40) |

(II) பாடத்திட்டம் :

21. நிதியியல் மற்றும் முகாமைத்துவக் கணக்கீடு
(இவ் வினாப்பத்திரம் 02 பகுதிகளைக் கொண்டமைந்திருப்பதோடு, 08 வினாக்களையும் கொண்டமைந்துள்ளது)

பகுதி I - நிதியியல் கணக்கீடு

இப் பகுதி (05) வினாக்களைக் கொண்டமைந்தது. முதலாவது வினா கட்டாயமானது என்பதுடன், எஞ்சிய நான்கு (04) வினாக்களுள் இரண்டு (02) வினாக்களைத் தெரிவு செய்தல் வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

1. கட்டாய வினா:

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பயன்பாடு பற்றி பரீட்சார்த்தியிடமுள்ள திறமைகளை அளவிடுவது இவ்வினா மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த வினாவில் ஐந்து உப பகுதிகள் உள்ளதோடு, ஒவ்வொரு பகுதிக்கும் 04 புள்ளிகள் வழங்கப்படும்.

இந்த வினா பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களை (இ.க.நி) உள்ளடக்கியிருக்கும்.

- நிதிக் கூற்றுக்கள் - இ.க.நி.1
- சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் - இ.க.நி. 16
- வருவாய் இ.க.நி. 18
- காசுப்பாய்ச்சல் கூற்று - இ.க.நி. 7
- பொருள் இருப்புகள் - இ.க.நி. 2
- கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் - இ.க.நி. 8
- அறிக்கையிடும் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள் - இ.க.நி. 10
- குத்தகைகள் - இ.க.நி. 17
- வருமான வரி - இ.க.நி. 12
- ஏற்பாடுகள், எதிர்பாரா சொத்துக்கள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள் - இ.க.நி. 37
- நிதிச் சாதனங்கள் - இ.க.நி. 39

2. வினா : நிதிக் கூற்றுக்களுக்கான எண்ணக்கரு சார்ந்த மற்றும் ஒழுங்குமுறைக் கட்டமைப்பு

பொது குறிக்கோள்கள், நிதிக் கூற்றுக்களின் நோக்கங்கள், பயன்படுத்தும் அனுமானங்கள், நிதிக் கூற்றுக்களின் தரநிலை பண்புகள், நிதிக் கூற்றுக்களின் மூலங்களை இனங்காணல் மற்றும் அளவிடுதல், மூலதன எண்ணக்கருக்கள் மற்றும் மூலதனப் பராமரித்தல் எண்ணக்கரு, கூட்டுத்தாபன கட்டுப்பாடுகள் தொடர்பான ஏற்பாடுகள், கம்பனிச் சட்டங்கள் மற்றும் இலங்கை பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள்.

3. வினா : திரட்டிய நிதிக்கூற்றுக்கள் உள்ளிட்ட வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள்
வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியொன்றில் காணப்படும் நிதிமூலங்களினை அடையாளங் காணல், பங்குகள் மற்றும் தொகுதிக் கடன் பத்திரங்களை வழங்குதல் மற்றும் மீட்டல் தொடர்பான பேரேட்டுக் கணக்குளைத் தயாரித்தல், முகாமைத்துவ மற்றும் வெளியீட்டு நோக்கங்களுக்காக நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்.

4. வினா : இலாபமீட்டாத அமைப்புக்களுக்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்.

5. வினா: நிதிக்கூற்றுக்களின் பகுப்பாய்வு, நிதிப் பெறுபேறுகளின் வரைவிலக்கணம் மற்றும் தொடர்பாடல், நிதியல்லாத அறிக்கையிடல்.

பகுதி II - முகாமைத்துவக் கணக்கீடு

இந்தப் பகுதி பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் 03 வினாக்களைக் கொண்டிருக்கும் என்பதோடு, 02 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

1. கிரய கணக்கீட்டு அம்சங்கள்

   கிரயங்களை வகைப்படுத்தல், கிரயங்களின் நடத்தை, மதிப்பீடு செய்தல், மூலப்பொருட்கள் மற்றும் இருப்புக் கட்டுப்பாடு, உழைப்புக் கிரயம், குறிப்பிட்ட மற்றும் தொடர்ச்சியான கட்டளை கிரயவியல்.

2. கிரயக் கணக்கீட்டு முறைகள்

   உள்ளீட்டு கிரயவியல் மற்றும் எல்லை கிரயவியல், செயற்பாட்டு அடிப்படையிலான கிரயவியல், செயன்முறை கிரயவியல், உற்பத்திக் கணக்கீடு (Throughput Accountancy) மற்றும் தற்கால முகாமைத்துவக் கணக்கீடு.

3. வியாபாரத்திற்கான நிதிக் கணிதம் மற்றும் கருத்திட்ட மதிப்பீட்டு அடிப்படைகள், கூட்டுதல், தள்ளுபடி செய்தல்.

4. நியமக் கிரயவியலும் முரண்கள் பகுப்பாய்வும்

5. வியாபாரச் செயற்பாடுகளுக்கான கணிதம்

6. வரவு செலவு திட்டமும் எதிர்வுகூறுதலும்

   வரவு செலவுத் திட்டம், வரவு செலவுத் திட்டத் தயாரிப்பு மற்றும் வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடுகள்.

7. நிச்சயமற்ற தன்மையின் கீழ் தீர்மானமெடுத்தல்

   குறுகிய கால மற்றும் நீண்ட கால தீர்மானங்களை எடுப்பதற்கான தகவல்கள், கிரயம் - அளவு - இலாபப் பகுப்பாய்வு, மேலதிக செயன்முறை விலையிடல் (Further processing pricing),பல்வேறு நிதிக்கட்டுப்பாடுகளுக்கான முடிவுகளை எடுத்தல் (Multi – constraint decision making)

8. தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

22. உயர் கணக்காய்வு மற்றும் பொருளாதாரப் பகுப்பாய்வு
(இவ் வினாப்பத்திரம் 02 பகுதிகளைக் கொண்டிருப்பதுடன், எட்டு (08) வினாக்களை உள்ளடக்கியுள்ளது.)

பகுதி I – உயர் கணக்காய்வு

இந்தப் பகுதி பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் 05 வினாக்களைக் கொண்டிருக்கும் என்பதோடு, 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

1. பல்வேறு வகை கணக்காய்வுகளும் அக் கணக்காய்வுகளின் நோக்கங்களும்

   நிதிக் கணக்காய்வு, முறைமை கணக்காய்வு, இணக்கப்பாட்டுக் கணக்காய்வு, நிதிக் கணக்காய்வின் பெறுமதி, செயல்திறன் கணக்காய்வு, தடயவியல் கணக்காய்வு, உள்ளகக் கணக்காய்வு, வெளியகக் கணக்காய்வு, முகாமைத்துவக் கணக்காய்வு என்பன.

2. கணக்காய்வுத் திட்டமிடலும் கட்டுப்பாடும்

   கணக்காய்வுத்திட்டமிடல்,நேரம்குறித்தல்,இடைக்கால மற்றும் இறுதிக் கணக்காய்வு,செயற்பாடுகளுக்குரிய பொறுப்புக்களை ஒப்படைத்தல், உள்ளகக் கட்டுப்பாட்டுப் பயன்பாடு உள்ளடங்கலாக செய்யப்பட்ட வேலைகளை அறிக்கையிடல், உள்ளகக் கட்டுப்பாட்டு மதிப்பீட்டிற்கான வினாக்கொத்துக்களையும் படிவங்களையும் தயாரித்தல்.

3. தொழில்முறை நடத்தைகளும் நெறிமுறைகளும்

நேர்மை, கணக்காய்வுச் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களைத் திரட்டுதல், மதிப்பீடு செய்தல் மற்றும் தொடர்பாடல் விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கல், தகவல்களின் இரகசியத் தன்மை, தொழில் நிபுணத்துவம், தொழில்முறைக் கடப்பாடுகள் மற்றும் அறிவு, திறமைகள் மற்றும் அனுபவங்களைப் பயன்படுத்துவதற்கான திறன்கள்.

4. சட்ட உரிமைகளும் பொறுப்புகளும்

கணக்காளர்களினதும் கணக்காய்வாளர்களினதும் சட்ட ரீதியான பொறுப்புகளும் இணைந்த சட்ட ஏற்பாடுகளும்

5. இடர் மதிப்பீடு மற்றும் முகாமைத்துவத்திற்கான நுட்பங்கள்

பல்வேறு வகையான இடர்கள், இடர் முகாமைத்துவச் செயல்முறை, நுட்பங்கள் மற்றும் சாதனங்களை அடையாளம் காணல் மற்றும் இடர் முகாமை

6. கணக்காய்வு நியமங்கள்

சர்வதேச கணக்காய்வு நியமங்கள் (ISAs) மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்கள் (SLAuSs)

7. உள்ளகக் கணக்காய்வுக் கடமைகள்

உள்ளகக் கணக்காய்வுக் கடமைகளையும் உள்ளகக் கணக்காய்வின் நோக்கங்களையும் இனங்காணல், கணக்காய்வுக் குழுக்கள்

8. சான்றுகளை சேகரித்தல்

சான்றுகளை சேகரிக்கும் வெவ்வேறு முறைகள் மற்றும் சான்றுகளை சேகரிக்கும் செயன்முறைகளை இனங்காணல், ஆதாரங்களின் செல்லுபடித்தன்மையை உறுதிப்படுத்தல்.

9. அறிக்கையிடல் தொழிற்பாடுகள்

அறிக்கை வகைகள், அறிக்கையிடல் நியமங்கள், கட்டமைப்பு, அறிக்கையிடும் செயல்முறை, கணக்காய்வு அபிப்பிராயங்கள் மற்றும் பின்னூட்டல் செயல்முறை போன்றவை.

பகுதி II - பொருளாதாரப் பகுப்பாய்வு

இந்தப் பகுதி பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் 03 வினாக்களைக் கொண்டிருக்கும் என்பதோடு, 02 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

1. பேரண்டப் பொருளாதார மாறிகளைப் புரிந்து கொள்ளல்

பேரண்டப் பொருளாதார மாறிகள் மற்றும் பிரதான குறியீடுகள், பேரண்டப் பொருளாதார மாறிகளை மதிப்பீடு செய்வதன் நோக்கம், பேரண்டப் பொருளாதார மாறிகளிடையே காணப்படும் பரஸ்பர தொடர்புகள் மற்றும் இலங்கையின் தற்போதைய நிலவரத்தை இனங்காணல்.

2. தேசிய வருமான நிர்ணயமும் தேசிய வருமானக் கணக்கீடும்

தேசிய வருமானத்தை அளவிடும் முறைகள், தேசிய வருமானத்தின் துறைகள் ரீதியான பங்களிப்பு, மூலதன நுகர்வு, தனியார் நுகர்வு, தேசிய உற்பத்திகள் மற்றும் நலனோம்புகை மற்றும் இலங்கையின் தற்போதைய நிலவரம்

3. சர்வதேச வர்த்தகமும் பொருளாதார அபிவிருத்தியும்

சர்வதேச வர்த்தகக் கோட்பாடுகள், சர்வதேச வர்த்தகமும் பொருளாதார அபிவிருத்தியும், சென்மதி நிலுவை, நாணயமாற்று நடத்தைகள், தற்போதைய இலங்கையின் நிலவரம்.

4. வெளிநாட்டு நிதி, வெளிநாட்டு நேரடி முதலீடுகள், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் கடன், நிலையான கடன் முகாமைத்துவம் மற்றும் இலங்கையின் தற்போதைய நிலவரம்

5. மூலதனம் மற்றும் நிதிச்சந்தை, நிதி இடைத்தரகர்கள் மற்றும் நிதிக் கருவிகள்

6. நாணயக் கொள்கை

7. அரசிறைக் கொள்கை

3. *இலங்கைத் திட்டமிடல் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சிறப்புப் பகுதி*

(I) வினாப்பத்திரக் கட்டமைப்பு :-

| *வினாப்பத்திரம்* | *காலம்* | *வினாப்பத்திரத்தின் தன்மை* |
|---|---|---|
| 31.பொது விவேகம் | 03 மணித்தியாலம் | மொத்தப் புள்ளிகள் 100, சித்தியடையப் பெற வேண்டிய புள்ளிகள் 40%<br>கட்டமைக்கப்பட்ட கட்டுரைகள்,பல்தேர்வு வினாக்கள் மற்றும் / அல்லது சிறு வினாக்களைக் கொண்டமைந்தது. |

(II) பாடத்திட்டம்

| 31. பொது விவேகம் |
|---|
| இலங்கையின் புவியியல், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு சூழல் உட்பட இலங்கையின் ஒட்டுமொத்த சூழல் பற்றிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த தற்போதைய நிலைமைகள், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திகள் பற்றிய பரீட்சார்த்தியின் பொது விவேகத்தை மதிப்பிடுவதற்கான வினாக்களைக் கொண்டமைந்தது. |

4. *இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சிறப்புப் பகுதி*

(I) வினாப்பத்திரக் கட்டமைப்பு :-

| *வினாப்பத்திரம்* | *காலம்* | *வினாப்பத்திரத்தின் தன்மை* |
|---|---|---|
| 41. பொது அறிவு | 01மணித்தியாலம் | மொத்தப் புள்ளிகள் 100, சித்தியடையப் பெற வேண்டிய புள்ளிகள் 40%.<br>பல்தேர்வு வினாக்கள் மற்றும் / அல்லது சுருக்க விடையளிக்கும் வகையிலான 50 வினாக்களைக் கொண்டமைந்தது. |
| 42. பகுப்பாய்வுக் கற்கை | 1 ½ மணித்தியாலம் | மொத்தப் புள்ளிகள் 100, சித்தியடையப் பெற வேண்டிய புள்ளிகள் 40%.<br>விடய ஆய்வு உள்ளடங்கலாக, அட்டவணைகள் மற்றும் வரைபுகள் ஊடாகத் தயாரிக்கப்படும் புறவய வினாக்களைக் கொண்டமைந்தது. |

(II) பாடத்திட்டம்

| 41. பொது அறிவு |
|---|
| கல்வித் துறையுடன் தொடர்புடைய அதாவது, தேசியக் கல்விக் கொள்கைகள், சட்டம், நவீனமயப்படுத்தல் மற்றும் மறுசீரமைப்பு, தேசியக் கல்வியின் வரலாறு மற்றும் சமகாலத் தகவல்கள், கல்வியின் தேசிய மற்றும் சர்வதேச போக்குகள் போன்ற துறைகளில் பரந்த அறிவு மற்றும் தேசிய மற்றும் வெளிநாட்டுக் கல்வியின் தற்காலத் தகவல்கள், அதாவது, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப, சமூக – பொருளாதார, அரசியல், புவியியல், சட்டம், சுற்றாடல், கலாசாரம், விளையாட்டு குறித்து பரீட்சார்த்தியிடம் காணப்படும் அறிவைப் பரீட்சித்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. |
| 42. பகுப்பாய்வுக் கற்கை |
| பரீட்சார்த்தியிடம் காணப்படும் பகுப்பாய்வு, தொகுப்பாய்வு மற்றும் படைப்பாற்றல் திறனை மதிப்பிடுவதற்காகத் தயாரிக்கப்படும் விடய ஆய்வு உள்ளடங்கலாக, அட்டவணைகள் மற்றும் வரைபுகள் ஊடாகத் தயாரிக்கப்படும் புறவய வினாக்களைக் கொண்டமைந்தது. |

**குறிப்பு** : இலங்கை விஞ்ஞான சேவைக்கான ஆட்சேர்ப்பிற்கென சிறப்பு வினாப்பத்திரங்கள் இல்லை என்பதோடு, விண்ணப்பதாரிகள் முதலாம் பகுதியின் (பொதுப் பகுதி) வினாப்பத்திரங்களுக்கு மாத்திரம் தோற்றுதல் வேண்டும்.

*10.2.* **நேர்முகப் பரீட்சை**

(அ) ***இலங்கை நிர்வாக சேவை***

*பொதுப் பகுதி மற்றும் சேவைக்கான சிறப்புப் பகுதியின் அனைத்து எழுத்துமூல வினாப்பத்திரங்களுக்குமுரிய புள்ளிகளில் குறைந்தபட்சம் 40% அல்லது அதனிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறன் ஒழுங்கிற்கு அமைய நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையானது சாதாரண நேர்முகப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என இரண்டு (02) பகுதிகளைக் கொண்டமைந்தது.*

1. *சாதாரண நேர்முகப் பரீட்சை*

(i) *திறன் ஒழுங்கில் உள்ள விண்ணப்பதாரிகளுள் வெற்றிட எண்ணிக்கைக்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்ய எதிர்பார்க்கும் தொகையினர் மற்றும் வெற்றிட அளவில் 25% தொகையினர் ஆகிய இரண்டின் கூட்டுத்தொகையாகக் கொள்ளப்படும் தொகையினர் மாத்திரமே சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தகைமை பெற்ற பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையானது மேற்குறித்த எண்ணிக்கையை விடக் குறைவாக இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் தகைமை பெற்ற பரீட்சார்த்திகள் மாத்திரமே சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.*

(ii) *ஆட்சேர்ப்புத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளனரா என்பதைப் பற்றியும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கான வரையறைகளுக்கு அமைவாக உள்ளனரா என்பதைப் பற்றியும் பரிசீலிப்பதற்காக சாதாரண நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். இந் நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.*

(iii) *சாதாரண நேர்முகப் பரீட்சைக் குழுவானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.*

2. *கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை*

i. *அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் விண்ணப்பதாரிகளின் முகாமைத்துவ திறமை, தலைமைத்துவப் பண்புகள் மற்றும் தொடர்பாடல் திறமை மற்றும் ஆளுமையை அளவிடுவதற்காக பின்வரும் நடைமுறைக்கு அமைய கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அதன் போது பெற்றுக் கொள்ளக் கூடிய உச்சப் புள்ளிகள் இருபத்தைந்து (25) ஆகும்.*

| | துறை | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|
| 01 | முகாமைத்துவ திறமை | 10 |
| 02 | தலைமைத்துவப் பண்புகள் | 05 |
| 03 | தொடர்பாடல் திறமை | 05 |
| 04 | ஆளுமை | 05 |
| | மொத்தம் | 25 |

ii. *சாதாரண நேர்முகப் பரீட்சையின் போது ஆட்சேர்ப்பிற்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளதாக உறுதிப்படுத்தப்படும் விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கான தகைமையைப் பெறுவர். மேற்குறித்தவாறு சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுள் குறிப்பிட்ட தொகையினர் கட்டமைக்கப்பட்ட பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கான தகைமையைப் பெற்றுக் கொள்ளாவிடினும், அவ்வாறு தகைமையைப் பெறாதவர்களுக்குப் பதிலாக வேறு விண்ணப்பதாரிகள் மீளவும் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட மாட்டார்கள்.*

iii. *வெற்றிட எண்ணிக்கைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கையை ஆட்சேர்ப்புச் செய்கையில் எழுத்துமூலப் பரீட்சையின் போது பெற்றுக் கொண்ட புள்ளிகள் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது பெற்றுக் கொண்ட புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கு அமைய உச்சப் புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரி தொடக்கம் திறன் ஒழுங்கிற்கு அமைவாக இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.*

(ஆ) ***இலங்கை கல்வி நிர்வாக சேவை***

*பொதுப் பகுதி மற்றும் சேவைக்கான சிறப்புப் பகுதியின் அனைத்து எழுத்துமூல வினாப்பத்திரங்களுக்குமுரிய புள்ளிகளில் குறைந்தபட்சம் 40% அல்லது அதனிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறன் ஒழுங்கிற்கு அமைய நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையானது சாதாரண நேர்முகப் பரீட்சை மற்றும் வாய்மொழிப் பரீட்சை என இரண்டு (02) பகுதிகளைக் கொண்டமைந்தது.*

1. *சாதாரண நேர்முகப் பரீட்சை :*

(i) *திறன் ஒழுங்கில் காத்திருக்கும் விண்ணப்பதாரிகளுள் வெற்றிட எண்ணிக்கைக்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்ய எதிர்பார்க்கும் தொகையினர் மற்றும் வெற்றிட அளவில் 25% தொகையினர் ஆகிய இரண்டின் கூட்டுத்தொகையாகக் கொள்ளப்படும் தொகையினர் மாத்திரமே சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தகைமை பெற்ற பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையானது மேற்குறித்த எண்ணிக்கையை விடக் குறைவாக இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் தகைமை பெற்ற பரீட்சார்த்திகள் மாத்திரமே சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.*

(ii) *ஆட்சேர்ப்புத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளனரா என்பது பற்றியும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கான வரையறைகளுக்கு அமைவாக உள்ளனரா என்பதைப் பற்றியும் பரிசீலிப்பதற்காக சாதாரண நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். இந் நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.*

(iii) *சாதாரண நேர்முகப் பரீட்சைக் குழுவானது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவினால் நியமிக்கப்படும்.*

2. *வாய்மொழிப் பரீட்சை:*

(i) *அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளின் தர்க்க ரீதியில் பிரச்சினைகளைத் தீர்த்தல், தொடர்பாடல் திறன் மற்றும் ஆளுமையை அளவிடுவதற்காக வாய்மொழிப் பரீட்சை நடாத்தப்படும்.*

(ii) *சாதாரண நேர்முகப் பரீட்சையின் போது ஆட்சேர்ப்பிற்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளதாக உறுதிப்படுத்தப்படும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.*

(iii) *வாய்மொழிப் பரீட்சைக்கான புள்ளி வழங்கும் போது கவனத்திற் கொள்ளப்படும் தேர்வளவுகள்*

| *துறை* | *உச்சப் புள்ளிகள்* |
|---|---|
| 1. *தர்க்க ரீதியில் பிரச்சினைகளைத் தீர்த்தல்* | 10 |
| 2. *தொடர்பாடல் திறன்* | 10 |
| 3. *ஆளுமை* | 05 |
| *மொத்தம்* | 25 |

(iv) *முதற் கட்ட சாதாரண நேர்முகப் பரீட்சை மற்றும் வாய்மொழிப் பரீட்சை நடாத்தப்பட்டு அதன் மூலம் நியமனங்கள் வழங்கப்பட்டதன் பின்னர் மேலும் வெற்றிடங்கள் காணப்படுமாயின் இரண்டாம் கட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு எஞ்சிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.*

(இ) ***இலங்கை கணக்காளர் சேவை மற்றும் திட்டமிடல் சேவை***

*சாதாரண நேர்முகப் பரீட்சை மாத்திரம் நடாத்தப்படுவதோடு, பொதுப் பகுதி மற்றும் சேவைக்கான சிறப்புப் பகுதியின் அனைத்து எழுத்துமூல வினாப்பத்திரங்களுக்குமுரிய புள்ளிகளில் குறைந்தபட்சம் 40% அல்லது அதனிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள், நிரப்புவதற்கு*

உத்தேசிக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக திறன் ஒழுங்கிற்கு அமைய மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், நேர்முகப் பரீட்சையின் போது தகைமைகள் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள், எழுத்துமூலப் பரீட்சையின் போது பெற்றுக் கொண்டுள்ள புள்ளிகளின் திறன் ஒழுங்கிற்கு அமைய நியமிப்பிற்காகத் தெரிவு செய்யப்படுவர். நேர்முகப் பரீட்சைக் குழுவானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

(ஈ) ***இலங்கை விஞ்ஞான சேவை***

*சாதாரண நேர்முகப் பரீட்சை மாத்திரம் நடைபெறுவதோடு, முதலாம் பகுதியின் (பொதுப் பகுதி) எழுத்துப் பரீட்சையில் சித்தி பெற்ற, குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் புள்ளிகளின் திறன் ஒழுங்கிற்கு அமைய சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சாதாரண நேர்முகப் பரீட்சையின் போது தகைமைகள் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக் கொண்டுள்ள புள்ளிகளின் திறன் ஒழுங்கு மற்றும் பதவிகளுக்கு வழங்கியுள்ள விருப்பத் தெரிவு ஒழுங்கு என்பவற்றின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். நேர்முகப் பரீட்சைக் குழுவானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.*

10.3. ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவோர் எண்ணிக்கையானது மேற்குறித்த தேர்வளவுகளின் கீழ் நியமிப்புச் செய்யும் அதிகாரியினால் தீர்மானிக்கப்படும்.

***கவனத்திற் கொள்க :-***

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதானது நியமனம் வழங்குவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதாகக் கொள்ளப்பட மாட்டாது.

10.4. பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் தபால் மூலமாக அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தள முகவரியினூடாக தனிப்பட்ட முறையில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பெறுபேறுகள் அறிவிக்கப்படும்.

10.5. பல சேவைகளுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரி ஒருவர் தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள விருப்பத்தெரிவுக்கு அமைய தகைமை பெறும் பதவிக்குத் தெரிவு செய்யப்படுவார்.

11. இங்கு ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனுமொரு விடயம் தொடர்பில் தீர்மானமெடுக்கும் உரிமை நியமிப்பு செய்யும் அதிகாரிக்குரியதாகும்.

12. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் ஒரு பொருத்தமற்ற நிலை அல்லது இசைவின்மை காணப்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் இணக்கப்பாடு மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய.

எம். ஏ. பீ. தயா செனரத்,
செயலாளர்.

அரசாங்க சேவை ஆணைக்குழு,
2021, யூலை 15.

7-561